அ.வ.எண். 75/2020 நாள்: 30.01.2026

வா.சா. 2 திரு. கருப்பையன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

5) வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் நீலாம்மாள் பெயரிலுள்ளது. பிரதிவாதிகள் மேற்படி நீலாம்மாளுக்கு என்ன உறவு என்றால் உறவினரல்ல நீலாம்மாளுக்கு சமையல் செய்து கொடுத்தவர்கள் (சமையல்காரர்கள்). யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் பிரகதாம்பாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். மேற்படி கிரையம் வாய்மொழியானதா அல்லது எழுத்துபூர்வமானதா என்றால் எழுத்துபூர்வமாக கிரையம் வாங்கினேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் எழுத்துபூர்வமாகவும், வாய்மொழியாகவும் கிரையம் பெற்றதாக இரண்டுவிதமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் முதலில் வாய்மொழியாக கிரையம் வாங்கினேன், ஊரில் வைத்து பேசி எழுத்துபூர்வமாக கிரையம் வாங்கினேன். எழுத்துபூர்வமாக வாங்கியதாக சொல்லப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான்.

6) மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது அல்ல என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார்யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் N.V.நாராயணசாமி, N.S.நாராயணசாமி, R.கிருஷ்ணய்யர், ராஜாமணி (பிரகதாம்பாள் அண்ணன்), Y.சீனிவாசன் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். மேற்படி ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி, மின் கட்டண ரசீது, சொத்து வரி ஆகியவை யார் பெயரிலுள்ளது என்றால் எனது பெயரிலுள்ளது.

7) பொதுவாக பட்டா யார் பெயரில் உள்ளதோ அவர்களின் பெயரில்தான் ரசீது வழங்கப்படும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் வழக்கு சொத்திற்கு தொடர்பற்றது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இருவரும் பிரகதாம்பாளின் மகள்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள், அவர்களிடமிருந்து சொத்தை அபகரிக்க நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Karuppaiyan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.01.30 15:51:08 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU